# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Tamil Nadu Pollution Control Board**

**Press Release**

**Let us celebrate a Noiseless and Smoke Pollution Free Deepavali-2022**

We all know Deepavali is one of the important festivals celebrated by people of our country. During Deepavali along with wearing of new clothes and distribution of sweets, bursting of crackers & colour ful lights have become customary for many generations to show the happiness.

However, bursting of fire crackers has severe deleterious effects on our health like causing deafness both temporary and permanent, depending on the intensity of noise they generate. It also causes land, water and air pollution and ultimately impact the environment. In this regard, a Public Interest Litigation was filed in the Hon'ble Supreme Court of India with a request to ban the production and sale of crackers. The Hon'ble Supreme Court in its Judgment dated 23.10.2018 have instructed the manufactures to manufacture the crackers by using the raw materials that will reduce the emission level besides directing them to manufacture and sell the Green crackers in future.

The Hon'ble Court has also directed to create adequate awareness on the pollution of air due to bursting of crackers and to encourage the community fire cracking at particular period of time. Based on the above the Government of Tamil Nadu in the year 2018,2019,2020 & 2021 have permitted the people of Tamil Nadu to burst the crackers between 6.00 AM to 7.00 AM and 7.00 PM to 8.00 PM. Similarly this year also the **Government have permitted to burst the crackers between 6.00 AM to 7.00 AM and 7.00 PM to 8.00 PM**.

Further considering the significance and the harmfulness caused due to the bursting of crackers to the Environment and Health of the people and there on to protect the environment, the TNPCB every year taking various follow-up actions in this regard. Accordingly action is taken to create awareness among the public through schools, colleges, Eco clubs and National Green Corps (NGC) with the help of School Education, Higher Education Departments and Micro, Small and Medium Enterprises (MSME) Department, Director General of Police, all District Collectors, Director of Environment and Commissioners of all Municipal Corporations in Tamil Nadu.

As per the Hon'ble Supreme Court direction, the public are requested to follow the DO's and Don'ts to celebrate safe and pollution free Deepavali:

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in

**Do's:**

i). Public shall burst fire crackers of less polluting and low sound generating green crackers.

ii). Burst the crackers as community fire cracking in a common place with the permission of district administration / local bodies through the local Welfare Associations etc.

**Don'ts:**

i). Avoid bursting of joined (Series) fire crackers which creates huge noise .

ii). Avoid bursting of fire crackers in silence areas like hospitals, schools, courts and religious places.

iii). Avoid bursting of fire crackers near huts and fire prone areas.

Deepavali is a family festival and can be enjoyed by everyone. Government of Tamil Nadu is making a sincere appeal to the people to celebrate a noiseless, smoke free and safe Deepavali with families, relatives, friends and neighbors.

Let us celebrate this Deepavali, as a festival of light in an environment friendly manner rather than bursting noise and smoke emitting crackers.

**Wishing everyone a very Happy Green Deepavali.**

**-Sd-**

**Chair person**
**Tamil Nadu Pollution Control Board**

K. Gre 10.10.2022
**For Chairperson**

**TAMIL NADU POLLUTION CONTROL BOARD**

## செய்தி வெளியீடு

## விபத்து, ஒலி மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும் காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய்பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை கோரி மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தனது 23.10.2018 ஆம் நாளிட்ட ஆணையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த மூலப்பொருட்களை பயன்படுத்தி பட்டாசுகளை உற்பத்தி செய்ய வேண்டும் எனவும், வருங்காலத்தில் பசுமைப் பட்டாசுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும் எனவும் நிபந்தனைகளை விதித்தது.

மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், பட்டாசுகளை வெடிப்பதால் காற்றின் தரம் பாதிக்கப்படுவது குறித்து போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், திறந்தவெளியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை தினத்தன்றும், கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7

முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தும் உடல் நலனில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தேசிய பசுமை படைகள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஆகிய துறைகளின் செயலாளர்கள், காவல்துறை இயக்குநர், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல் துறை இயக்குநர், மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்போடு அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனை த்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கீழ்கண்டவற்றைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது :-

<u>பாதுகாப்பான தீபாவளி கொண்டாடுவதற்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை</u>

1. பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.
2. மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி

கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்க வேண்டும்.

<u>தவிர்க்க வேண்டியவை</u>

1. அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.
2. மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
3. குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச் சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைவருக்கும் இதயங்கனிந்த மாசற்ற தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

* * * * * *

–ஒம்–
தலைவர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

10.10.2022

தலைவருக்காக

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in